# TNPSC GROUP I / II PRELIMINARY BATCH I 2024
# WEEK TEST 4

1. Among the following which are the correctly matched pairs?
   i. Nannool "Ulagam Enpathu Uyarthormerray".
   ii. Kalithogai "Panpenapaduvathu Paadaruntha Ozhuguthal".
   iii. Thirukural: "Panpudaiyaar Pattundu Ulagam"
   a. i, ii, iii b. i, ii c. ii, iii
   d. i, iii e. Answer not known
   பின்வருவனவற்றுள் சரியான இணைகள் எவை?
   i. நன்னூல் - "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே"
   ii. கலித்தொகை – "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"
   iii. திருக்குறள் - "பண்பு உடையார்ப் பட்டுஉண்டு உலகம்".
   a. i, ii, iii b. i, ii c. ii, iii
   d. i, iii e. விடை தெரியவில்லை

2. Choose the correct statements
   i. In the Sangam works of Ten Idylls. There are six works of Aarupadai (telling the way).
   ii. The work speaks of both love and heroism (bravery).
   iii. The work Madurai Kaanchi speaks of the glory and greatness of the Pandian king Nanmaaran.
   iv. The work Manimegalai is called Revolutionary epic.
   a. ii, iii, iv b. i, ii c. ii, iv
   d. All the above e. Answer not known
   பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?
   i. பத்துப்பாட்டில் ஆறு ஆற்றுப்படை நூல்கள் உள்ளன.
   ii. நெடுநல்வாடை காதலையும், வீரத்தையும் ஒரு சேரப் பேசுகிறது.
   iii. மதுரைக்காஞ்சி, பாண்டியன் நன்மாறனின் சிறப்பைக் கூறுகின்றது.
   iv. மணிமேகலை புரட்சிக் காப்பியமென்று அழைக்கப்படுகின்றது
   a. ii, iii, iv b. i, ii c. ii, iv
   d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

3. Which among the following works mentions that India and ancient Egypt were in trade links for a long time even before the Greeks stepped into civilized social living?

a. Periplus of the Erythraean Sea
b. The geographical work of Strabo
c. Plinys work on Biology
d. Ptolemys work on Geography
e. Answer not known

கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும் பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் குறிப்பிடும் நூல்,

a. எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்
b. ஸ்ட்ராபோவின் பூகோள நூல்
c. பிளினியின் உயிரியல் நூல்
d. தாலமியின் பூகோளநூல்
e. விடை தெரியவில்லை

4. Consider the following statements.
Assertion (A): Many Tamil words had found their way into Greek language.
Reason (R): The Greeks had trade contacts with the Tamils since the fifth century BCE

a. Both A and R are true and R is the correct explanation of A
b. A is true, R is false
c. A is false, R is true
d. Both A and R are true and R is not the correct explanation of A
e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க.
கூற்று (A): பல தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழியில் இடம்பெற்றிருந்தன.
காரணம் (R): பொது ஆண்டிற்குமுன் ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிரேக்கர்கள், தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்

a. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
b. (A) சரி, ஆனால் (R) தவறு
c. (A) தவறு, ஆனால் (R) சரி
d. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
e. விடை தெரியவில்லை

5. Which among the following are Pandyan copper plates?
i. Velvikudi Pattayam (Plates)
ii. Dhalavaipura Copper Plates
iii. Chinnamanur document
iv. Karanthai Copper Plates
v. Sivakasi Copper Plates

a. i, ii, v
b. iii, iv, v
c. i, ii, iii, v
d. All correct
e. Answer not known

பின்வருவனவற்றுள் பாண்டியர்காலப் பட்டயங்கள் எவை?
i. வேள்விக்குடிப் பட்டயம்
ii. தளவாய்புரச் செப்பேடு
iii. சின்னமனூர்ச் சாசனம்
iv. கரந்தைச் செப்பேடுகள்
v. சிவகாசிச் செப்பேடுகள்


PH: 044 - 24339436, 42867555, 9840226187

a. i, ii, v　　b. iii, iv, v　　c. i, ii, iii, v
d. அனைத்தும் சரி　　e. விடை தெரியவில்லை

6. Which of the following statements is / are correct?
   i. The copper coins released during the Sangam Age were square in shape with the figure of an elephant on one side and twin fishes on the other side
   ii. The coins released during the rule of the Pallavas had only the figure of Nandhi which was their emblem.

   a. i, ii　　b. ii　　c. i　　d. None　　e. Answer not known

   பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
   i. சங்க காலத்தில் வெளியிடப்பட்ட சதுர வடிவ செப்பு நாணயங்களில் ஒருபுறமும் யானையும் மறுபுறம் இரட்டை மீன்களும் காணப்பட்டன.
   ii. பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் பல்லவர்களின் சின்னமான நந்தி மட்டுமே காணப்பட்டது.

   a. i, ii　　b. ii　　c. i　　d. ஏதுமில்லை　　e. விடை தெரியவில்லை

7. Which among the following statement is/are right?
   i. The section Porul Athigaram in Tholkaapiam gives information about Aha Thinai and Purathinai in detail.
   ii. It was Ilango adigal who gave the Epithet (adjective) for "Thollor Sirapin" (glorious tradition) to hospitality.
   iii. The work Mana Nool of ancient Tamil literature speaks of the ways and methods of cooking.

   a. i, ii, iii　　b. i, ii　　c. ii, iii　　d. i, iii　　e. Answer not known

   பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
   i. அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் வரிவாக விளங்குகின்றது
   ii. "தொல்லோர் சிறப்பின்" என்று விருந்துக்கு அடைகொடுத்து கூறியவர் இளங்கோவடிகள்
   iii. பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை மணநூல் குறிப்பிடுகிறது.

   a. i, ii, iii　　b. i, ii　　c. ii, iii　　d. i, iii　　e. விடை தெரியவில்லை

8. Which of the statements given below is/are correct with regard to the people of the Indus Valley Civilisation?
   i. The people of Indus valley civilization used the bone of the fish known as 'Cuttle' as medicine for skin diseases.
   ii. They followed two methods in burying a dead body.

iii. The method of burying the dead in the North South direction was a common feature in both the ancient Tamils and among the people of the Indus valley civilization.
iv. Like the ancient Tamils, the Indus valley people also used globular burial pots.

a. i, ii, iii, iv    b. i, iii    c. i, iii, iv
d. ii, iv    e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சிந்துவெளி மக்கள் குறித்து சரியானவை எவை?
i. சிந்துவெளி மக்கள் தோல்நோய்களுக்கு மருந்தாக கட்டில் என்னும் மீனின் எலும்பினைப் பயன்படுத்தினர்.
ii. சிந்துவெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்வதில் இரண்டு வகையான வழிமுறைகளைப் பின்பற்றினர்.
iii. இறந்தவர்களை வடக்கு தெற்காகப் புதைக்கும் வழக்கம் சிந்துவெளிக்கும் பண்டைய தமிழகத்திற்கும் பொதுவான நடைமுறையாக இருந்தது.
iv. உருண்டை வடிவம் கொண்ட (Globular) ஈமத்தாழிகள், சிந்துவெளியிலும் தமிழகத்திலும் பயன்படுத்தப்பட்டன.

a. i, ii, iii, iv    b. i, iii    c. i, iii, iv
d. ii, iv    e. விடை தெரியவில்லை

9. Which of the following statements is/are correct?
i. In the tree worship of the people of the Indus valley the worship of the Peepal tree was primary.
ii. The northern Brahmi script was developed from the Indus by the Dravidians.

a. i, ii    b. i    c. ii    d. none of these    e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
i. சிந்துவெளி மக்களின் மரவழிபாட்டில் அரசமரமே முதன்மையாக உள்ளது.
ii. வடபிராமி எழுத்துக்கள், சிந்துவெளி எழுத்துகளிலிருந்து திராவிடரால் வளர்க்கப்பட்ட நேரான வளர்ச்சியுடைய எழுத்துக்கள்.

a. i, ii    b. i    c. ii    d. ஏதுமில்லை    e. விடை தெரியவில்லை

10. Which of the following statements is/are correct?
i. The war weapons of the Indus valley people are the best examples of artistic talent and fine craftsmanship of their culture.
ii. Of all the languages in the world Tamil alone has a unique way of pronunciation

a. i, ii    b. ii    c. i    d. none of these    e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
i. சிந்துவெளி மக்களின் பண்பாட்டில் மிகச் சிறந்த கலைபடைப்புகளாகத் திகழ்வன போர்க்கருவிகள்.
ii. உலக மொழிகள் எவற்றிக்கும் இல்லாத சிறப்பான ஒலிப்பு முறை தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு.

a. i, ii    b. ii    c. i    d. ஏதுவுமில்லை    e. விடை தெரியவில்லை


PH: 044 - 24339436, 42867555, 9840226187

APOLLO STUDY CENTRE

11. Which among the ancient Sangam literary works mentions "The love between two like minded persons will be permanent and everlasting?

a. Madurai Kanchi b. Ahanaanooru c. Tholkaapiam
d. Kurunthogai e. Answer not known

"மனமொத்த இருவருக்கிடையே தோன்றும் காதல், நிலைபேறு உடையதாக அமையும்" என்று குறிப்பிடும் நூல் எது?

a. மதுரைக்காஞ்சி b. அகநானூறு c. தொல்காப்பியம்
d. குறுந்தொகை e. விடை தெரியவில்லை

12. Which of the following works contains these lines "Pirar Noyyum Tham Noyypol potri Aran Arithal saanravarkku Ellam Kadan"

a. Madurai Kanchi b. Kalithohai c. Natrenai
d. Puranaanooru e. Answer not known

"பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன் அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்"
-என்ற பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

a. மதுரைக் காஞ்சி b. கலித்தொகை c. நற்றிணை
d. புறநானூறு e. விடை தெரியவில்லை

13. Which of the following poetesses lived in the Sangam Period?

i) Avvaiyaar ii) Okkur Masaathiyar
iii) Karaikal Ammaiyar iv) Nappasalaiyar
v) Ganga Devi vi) Mudathama kanniyar

a) i,iii,iv,v b. i,iv,v,vi c. i, ii, iv,vi
d. All are correct e. Answer not known

பின்வருவனவற்றுள் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற்புலவர்?

i. ஔவையார் ii. ஒக்கூர்மாசாத்தியார்
iii. காரைக்காலம்மையார் iv. நப்பசலையார்
v. கங்காதேவி vi. முடத்தாமக்கண்ணியார்

a. i, iii, iv, v b. i, iv, v, vi c. i, ii, iv, vi
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

14. Which of the works given here specifies truthfulness as pizhayaa Nan-mozhi and falsehood as poipothi Kodunchol?

a. Natrinai b. Pathitrupathu c. Madurai Kanchi
d. Puranaanooru e. Answer not known

"பிழையா நன்மொழி" என்று வாய்மையையும் பொய்மையைப் "பொய்பொதி கொடுஞ்சொல்" என்றும் குறிப்பிடும் நூல் எது?

a. நற்றிணை b. பதிற்றுப்பத்து c. மதுரைக்காஞ்சி
d. புறநானூறு e. விடை தெரியவில்லை

15. Indicating the number of elephants donated by the Chieftain Aai Andiran to the poets, which poet had praised him as "Vaanmeen Pala Poopinum Aanadhu Manne"?

a. Mosi Keeranaar  b. Muda Mosiyaar  c. Ilam Keeranaar
d. Kabilan  e. Answer not known

"ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன், தன்னை நாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை "வான்மீன் பல பூப்பினும் ஆனாது மன்னே" என்று புகழ்ந்துப் பாடிய புலவர்?

a. மோசிகீரனார்  b. முடமோசியார்  c. இளங்கீரனார்
d. கபிலர்  e. விடை தெரியவில்லை

16. Choose the incorrect pairs

i. Porkai pandian - The Pandiya king who cut off his own arm to save the honour of the chastity of a poor lady
ii. King Sibi - A dove came to him seeking refuge. He got into the weighing scale to offer his flesh and himself to save it.
iii. Manu Neethicholan - To render justice to the weeping cow for the loss of its calf, he sacrificed his son under the wheel of his charriot

a. i  b. ii  c. iii  d. None of these  e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் தவறான இணைகள் எவை?

i. பொற்கைப் பாண்டியன் - ஏழைப்பெண்ணின் மானம் காக்கத் தன் கையையே வெட்டிக் கொண்டவர்.
ii. சிபி மன்னன் - அடைக்கலம் தேடி வந்த புறாவினைக் காக்கத் தன்னையே தராசுத் தட்டில் ஏற்றிய மன்னன்.
iii. மனுநீதிச்சோழன் - கன்றிழந்த ஆவின் கண்ணீருக்கு நீதி வழங்கத் தன் மகனையே தேர்க்காலில் இட்டவர்.

a. i  b. ii  c. iii  d. ஏதுமில்லை  e. விடை தெரியவில்லை

17. Which among the statements given below are wrong in relation to the work Nannool?

i. Nannool is a grammatical work coming in the line of Tholkappiam
ii. It was written by monk Bhavanandhi
iii. The work has three sections Known as (letters)Ezhuthu (word) chol and meaning (Porul)

a. i  b. iii  c. ii  d. None of these  e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் நன்னூல் பற்றி தவறானவை எவை?

i. தொல்காப்பியத்தின் வழிநூலாக விளங்கும் இலக்கண நூல் நன்னூல்.
ii. பவணந்தி முனிவரால் இயற்றப்பட்டது.
iii. இதில், எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள் உள்ளது.

a. i  b. iii  c. ii  d. ஏதுமில்லை  e. விடை தெரியவில்லை


PH: 044 - 24339436, 42867555, 9840226187

18. Which among the statements given below are right?
   i. In the epic tradition, Silapathikaaram gets the primary place
   ii. The work Seevaga Chinthaamani has excellently recorded the Tamil culture, the way of life and Tamil arts.

a. i,ii  b. ii  c. i  d. None of these  e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. காப்பிய மரபில், முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கும் நூல் சிலப்பதிகாரம்.

ii. தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் கலைகளையும் சிறப்பாக பதிவுசெய்த நூல் சீவகசிந்தாமணி.

a. i, ii  b. ii  c. i  d. ஏதுமில்லை  e. விடை தெரியவில்லை

19. Which of the following clearly brings out that Kovalan had the principle of not forgetting the help he had received?
   i. Saving an elderly man from the elephant
   ii. Naming his daughter as Manimegalai
   iii. Earning his income by ethical means

a. i  b. ii  c. iii  d. None of these  e. Answer not known

கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன் என்பதைப் புலப்படுத்துவது?

1. யானையிடமிருந்து முதியவரைக் காப்பாற்றியது.
2. தன் மகளுக்கு மணிமேகலை என பெயர் சூட்டியது
3. அறவழியில் பொருள் ஈட்டியது

a. i  b. ii  c. iii  d. ஏதுமில்லை  ந. விடை தெரியவில்லை

20. Name the elderly shepherd lady who gave asylum to Kovalan and Kannagi at Madurai

a. Gauvundi Adigal  b. Aravana Adigal  c. Maadhari
d. Kaaya Chandigai  e. Answer not known

கோவலன், கண்ணகிக்கு அடைக்கலம் அளித்த ஆயர்குல மூதாட்டி?

a. கவுந்தியடிகள்  b. அறவணடிகள்  c. மாதரி
d. காயசண்டிகை  e. விடை தெரியவில்லை

21. "Ozhukathin Eithuvar Menmai Ezhukathin
Eithuvar Eithaa Pazhi"
(One will get glory and high place by being ethical and righteous. The fale from them will bring him great dishonour)
Which of the following works illustrate the idea in the couplet?

1. KambaRamayanam  2. Silapathikaaram  3. Manimegalai

a. 1, 3  b. 2, 3  c. All of these
d. None of these  e. Answer not known

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"
- என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்வது?


PH: 044 - 24339436, 42867555, 9840226187

1. கம்பராமாயணம் 2. சிலப்பதிகாரம் 3. மணிமேகலை

a. 1, 3 b. 2, 3 c. இவை அனைத்தும்

d. இவை ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

22. Which of the Statements given below is / are correct?

i. The "Sathukka Bootham" is an imaginary scene Elango Adigal in Silapathikaaram

ii. The work manimegalai illustrates that the disease of hunger is the cause of many crimes in the World

iii. Madhavi was referred to as Kanigai Magal by the Chola King

a. i,ii,iii b. ii,iii c. i,iii d. i,ii e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் அமைத்த கற்பனைக் காட்சி சதுக்க பூதம்.

ii. உலகில் நடைபெறும் பல குற்றச் செயல்களுக்குப் பசிப்பிணியே காரணம் என்பதை உணர்த்தும் நூல் மணிமேகலை.

iii. 'கணிகை மகள்' எனச் சோழ மன்னனால் குறிக்கப் பெற்றவர் மாதவி.

a. i, ii, iii b. ii, iii c. i, iii d. i, ii e. விடை தெரியவில்லை

23. Life is Temporary, Aram (Ethics) alone is permanent. Which of the following works illustrate this point

a. Kundala Kesi b. Valayapathy c. Mani megalai

d. Seevaga Chinthaamani e. Answer not known

வாழ்க்கை நிலையில்லாதது, அறம் ஒன்றே நிலைத்து நிற்கும் என்பதை உணர்த்தும் நூல்?

a. குண்டலகேசி b. வளையாபதி c. மணிமேகலை

d. சீவக சிந்தாமணி e. விடை தெரியவில்லை

24. Which among the epics given below came up at a time when the Chola kingdom rose in prominence?

a. Periapuranam b. Kamba Ramayanam c. Mana Nool

d. Yasodara Kaviyam e. Answer not known

சோழப்பேரரசு எழுச்சிபெற்ற காலத்தில் தோன்றிய காப்பியம் எது?

a. பெரியபுராணம் b. கம்பராமயணம் c. மணநூல்

d. யசோதர காவியம் e. விடை தெரியவில்லை

25. Which of the statements given here under is / are correct?

i. Silapathikaaram has mentioned the total number of arts are sixty four.

ii. Tamil Scholar Mylai Seeni Venkatasamy categorized the aesthetic arts into five categories

a. i,ii b.i c.ii d. None of these e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. சிலப்பதிகாரம், கலைகளை அறுபத்துநான்கு எனக் குறிப்பிட்டுள்ளது.

ii. அழகுக்கலைகளை ஐந்தாக வகைப்படுத்திய தமிழறிஞர் மயிலை சீனி, வேங்கடசாமி.

a. i, ii b. i c. ii d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

26. Which among the statements found below is\ are correct

i. The Place in Tamil nadu where the first rock cut cave temple was built is Mandakapattu in chenglepet district.

ii. It was Narasimha Varman I who built the first rock cut temple

a. i,ii b.i c.ii d. None of these e. Answer not known

பின்வரும் கூற்றகளில் சரியானவை எவை?

i. தமிழ்நாட்டில் முதல் குடைவரைக்கோவில் கட்டப்பட்ட இடம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு.

ii. முதல் குடைவரைக் கோவிலை அமைத்தவர் முதலாம் நரசிம்மவர்மன்.

a. i, ii b. i c. ii d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

27. Which among the following statements is / are correct?

i. The Sabanayakar Mandapam (Hall) in the Nataraja temple at Chidambaram is the evidence that in ancient days temples were built using wood

ii. The temples constructed before seventh century CE were built with burnt red bricks

a. i,ii b. i c. ii d. None of these e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டதற்கானச் சான்று சிதம்பரம் நடராஜர் கோவிலில் உள்ள சபாநாயகர் மண்டபம்.

ii. பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோவில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாக இருந்தன.

a. i, ii b. i c. ii d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

28. Match

| | |
|---|---|
| A. Prastharam | 1. Shoulder |
| B. Sigaram | 2. Leg |
| C. Stoopi | 3. Feet |
| D. Piththi | 4. Crown |
| E. Athittaanam | 5. Head |

பொருத்துக.

| | |
|---|---|
| A. பிரஸ்தரம் | 1. தோள் |
| B. சிகரம் | 2. கால் |
| C. ஸ்தூபி | 3. பாதம் |
| D. பித்தி | 4. மகுடம் |
| E. அதிட்டானம் | 5. தலை |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 | 5 |
| b. | 1 | 5 | 4 | 2 | 3 |
| c. | 2 | 4 | 5 | 3 | 1 |
| d. | 4 | 2 | 1 | 5 | 3 |

e. விடை தெரியவில்லை

29. Choose the correct statements
    i. Parantaka Chola I built stone temples on either sides of the river Cauvery
    ii. The later Cholas transformed temples built with bricks into those built with stones
    iii. Sembiyanmaadevi's contribution to Chola architecture is commendable

    a. i, ii, iii    b. i, ii    c. ii, iii    d. i, iii    e. Answer not known

    பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
    i. காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் கற்கோவில்களைக் கட்டியவர் முதலாம் பராந்தகச் சோழன்.
    ii. செங்கற்களால் கட்டப்பட்ட கோவில்களை எல்லாம் கருங்கற்களாலான கோவில்களாக மாற்றியவர்கள் பிற்காலச் சோழர்கள்.
    iii. சோழர்காலக் கட்டடக்கலையில் செம்பியன்மாதேவியின் பங்கு குறிப்பிடத்தக்கது.

    a. i, ii, iii    b. i, ii    c. ii, iii    d. i, iii    e. விடை தெரியவில்லை

30. Choose the incorrect statements
    i. Thanjai Big Temple has the tallest Vimaanam in Tamil Nadu
    ii. Srirangam temple has the tallest Gopuram in Tamil Nadu

    a. i, ii    b. i    c. ii    d. None    e. Answer not known

    பின்வரும் கூற்றுகளில் தவறானவை எவை?
    i. தமிழ்நாட்டில் மிக உயரமான விமானத்தை உடையக்கோவில் தஞ்சைப் பெரியகோவில்.
    ii. தமிழ்நாட்டில் மிக உயரமான கோபுரம் கொண்ட கோவில் ஸ்ரீரங்கம்.

    a. i, ii    b. i    c. ii    d. ஏதுமில்லை    e. விடை தெரியவில்லை

31. Which of the following statements about the Thanjai Big Temple are correct?
    i. It is 13 storeyed
    ii. 216 feet tall
    iii. The Second entrance is called "Keralaandakan Vaasal"
    iv. In 1983 UNESCO declared it as a World Heritage site

    a. i, ii, iii    b. ii, iv    c. i, ii
    d. All are correct    e. Answer not known


PH: 044 - 24339436, 42867555, 9840226187

பின்வரும் கூற்றுகளில் தஞ்சைப் பெரிய கோவில் பற்றி சரியானவை எவை?

i. 13 அடுக்குகளைக் கொண்டது.

ii. 216 அடி உயரம் கொண்டது.

iii. இரண்டாம் வாசல் "கேரளாந்தகண் வாசல்" என்று அழைக்கப்படுகின்றது.

iv. UNESCO நிறுவனம் 1983- இல் உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.

a. i, ii, iii  b. ii, iv  c. i, ii

d. அனைத்தும் சரி  e. விடை தெரியவில்லை

32. Arrange the following in descending order based on the height of their Vimanas

i. Thirubuvanam Kambagaresvarar temple

ii. Thanjai Periya Kovil

iii. Gangai Konda Cholapuram

a. i, ii, iii  b. ii, i, iii  c. ii, iii, i

d. iii, ii, i  e. Answer not known

கீழ்க்கண்டவற்றை அவற்றின் விமான உயரத்தின் அடிப்படையில் இறங்குவரிசையில் எழுதுக.

i. திரிபுவனம் கம்பகரேசுவரர் கோவில்

ii. தஞ்சைப் பெரிய கோவில்

iii. கங்கை கொண்ட சோழபுரம்

a. i, ii, iii  b. ii, i, iii  c. ii, iii, i

d. iii, ii, i  e. விடை தெரியவில்லை

33. Choose the correct statements

i. Padhitruppaththu talks about the wooden statues during the Sangam period

ii. In Manimegalai there is a reference to the statues made of plaster of Paris in Kaveripoompattinam that were viewed with joy by the people during the Indra festival

a. i, ii  b. i  c. ii  d. None  e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பதிற்றுப்பத்து கூறுகிறது.

ii. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சுதைச் சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை எடுத்துரைக்கின்றது.

a. i, ii  b. i  c. ii  d. ஏதுமில்லை  e. விடை தெரியவில்லை

34. Choose the correct pairs

i. Pallava Period – method of sculpting a statue from stone

ii. Pandya period – method of sculpting a statue from metals

iii. Mahendravarman I period – The statue of security men at the gates

a. i, ii, iii  b. ii, iii  c. i, ii

d. i, iii  e. Answer not known

பின்வருவனவற்றுள் சரியான இணைகள் எவை?
i. பல்லவர்காலம் - கல்லினால் சிற்பம் அமைக்கும் முறை
ii. பாண்டியர்காலம் - உலோகத்தினால் சிற்பம் அமைக்கும் முறை
iii. முதலாம் மகேந்திரவர்மன் காலம் - துவாரபாலகர்கள் சிற்பங்கள்
a. i, ii, iii b. ii, iii c. i, ii d. i, iii e. விடை தெரியவில்லை

35. Which of the following statements about "Prathimaigal" is/are correct?
i. To exactly sculpt the image an individual is called Prathimaigal
ii. The oldest prathimais are the statue of the Pandya king
iii. It was during the Chola period that Prathimais were made of metals
a. i, ii b. i, iii c. ii, iii d. All are correct e. Answer not known
பின்வரும் கூற்றுகளில் பிரதிமைகள் குறித்து சரியானவை எது?
i. தனிப்பட்ட ஒருவரின் உருவ அமைப்பை உள்ளது உள்ளவாறே அமைப்பது பிரதிமைகள் எனப்படும்.
ii. பிரதிமை உருவங்களில் பழைமையானது பாண்டிய அரசர் உருவங்கள்.
iii. உலோகங்களினால் பிரதிமைகள் அமைக்கும் வழக்கம் சோழர்காலத்தில் தோன்றியது.
a. i, ii b. i, iii c. ii, iii d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

36. Choose the incorrect statements
I. The art of sculpting attained its zenith during the period of the later Pandyas
II. The Second largest statue of Nandhi in India is found in Thanjai Periyakovil
a. i, ii b. ii c. i
d. None e. Answer not known
பின்வரும் கூற்றுகளில் தவறானவை எவை?
i. பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் சிற்பக்கலை உயர்ந்த நிலையை அடைந்தது.
ii. இந்தியாவில் உள்ள நந்திச் சிற்பங்களில் இரண்டாவது பெரிய சிற்பம் தஞ்சைப் பெரியகோவிலின் நந்திச் சிற்பம்
a. i, ii b. ii c. i
d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

37. Which Sangam work has information about the line art for the first time?
a. Puranaanooru b. Paripaadal c. Nedunalvaadai
d. Padhittruppaththu e. Answer not known
முதன்முதலில் வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ள சங்க கால நூல் எது?
a. புறநானூறு b. பரிபாடல் c. நெடுநல்வாடை
d. பதிற்றுப்பத்து e. விடை தெரியவில்லை

38. Which of the following statements is / are correct?

I. In the archaeological findings at Keezhadi, painted black and red were found

II. Paintings depicting a crowd of people is called padimai

a. i, ii b. i c. ii d. None e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. கீழடியில் நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ii. மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் படிமை, எனப்பட்டன.

a. i, ii b. i c. ii d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

39. Which of the following statement is / are correct?

i. There is information about paintings in Tholkaapiyam

ii. 'Ezhuthu' also means drawing

iii. Peripaadal mentions about the art gallery in the palace of "Thalaiyaalangkaanaththu Seruvendra Pandya Nedunjchezhiyan"

a. i,ii,iii b. i, ii c . ii, iii

d. i, iii e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

ii. எழுத்து என்ற சொல்லுக்கு ஓவியம் என்று பொருள்.

iii. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை பரிபாடல் குறிப்பிடுகின்றது.

a. i, ii, iii b. i, ii c. ii, iii

d. i, iii e. விடை தெரியவில்லை

40. Which festival has been referred to in Sangam literature as Munnervizha and Naavaaivizha?

a. Indra Vizha b. Neythal Vizha c. Paalai nila Vizha

d. Kurinjinila Vizha e. Answer not known

முந்நீர் விழா, நாவாய் விழா என சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள விழா எது?

a. இந்திர விழா b. நெய்தல் விழா c. பாலைநில விழா

d. குறிஞ்சிநில விழா e. விடை தெரியவில்லை

41. The biggest festival in Tamilnadu that is celebrated by both Saivites and Vaishnavites is ____.

a. Aadiperukku b. Madurai Chiththirai Thiruvizha

c. Maghaamagaththiruvizha d. Deebaththiruvizha

e. Answer not known

சைவமும் வைணமும் இணைந்து கொண்டாடும் தமிழகத்தின் மிகப்பெரிய திருவிழா?

a. ஆடிப்பெருக்கு b. மதுரை சித்திரைத் திருவிழா c. மகாமகத்திருவிழா
d. தீபத்திருவிழா e. விடை தெரியவில்லை

42. The birthday of Thirumaal on the full moon day of the month of Aavani is celebrated as

a. Vaikunda Ekaadesi b. Thiruvonam
c. Aadhirai Thiruvizha d. Thiruvaimozhi Thiruvizha
e. Answer not known

திருமாலின் பிறந்தநாளான ஆவணி மாதம் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழா?

a. வைகுண்ட ஏகாதேசி b. திருவோணம் c. ஆதிரைத் திருவிழா
d. திருவாய்மொழித் திருவிழா e. விடை தெரியவில்லை

43. Which of the following statement is /are correct?

i. Aadhirai thiruvizha is celebrated on the full moon day in the month of Maargazhi
ii. Deepavali is celebrated every year during the waxing crescent moon in the Iyppasi month.

a.i, ii b.i c.ii d. None e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. ஆதிரைத் திருவிழா ஆண்டுதோறும் மார்கழி மாத முழுநிலவு நாளில் கொண்டாடப்படுகிறது.
ii. தீபாவளி ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் வளர்பிறை நாளில் கொண்டாடப்படுகின்றது.

a. i, ii b. i c. ii d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

44. Which of the following statement is / are correct?

i. Kandhaviradha vizha is a festivity paying obeisance to the Tamil God Lord Muruga.
ii. Vaikaasi Visaagam is celebrated in the month of Vaikaasi on a new moon night.
iii. In the month of Aadi, the Kaarthigai star is considered to be lord Muruga's day and obeisance is paid to him

a.i, ii, iii b.ii, iii c.i, iii d.i, ii e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. கந்தவிரத விழா என்பது தமிழ்க் கடவுளான முருகனை வணங்கும் விழா.
ii. வைகாசி மாதம் அமாவசை நாளன்று வைகாசி விசாகம் கொண்டாடப்படுகிறது.
iii. ஆடி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தை முருகனுக்குரிய நாளாகக் கருதி வழிபடப்படுகிறது.

a. i, ii, iii b, ii, iii c. i, iii d. i, ii e. விடை தெரியவில்லை

45. Which of the following statement is / are wrong?

i. Tholkaappiyar refers to games as one variety of happiness.

ii. There are references to yeruthazhuvudhal in Mullaikkali.

iii. In the palm leaflet called Nadasaari, the origin story of Yeruthazhuvudhal has been described

a. i, ii, iii b. i, ii c. i, iii d. ii, iii e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் தவறானவை எவை?

i. விளையாட்டு என்பதை உவகைச் சுவையில் ஒன்றாக தொல்காப்பியர் கூறுகிறார்.

ii. முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

iii. நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் ஏறுதழுவுதலின் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது.

a. i, ii, iii b. i, ii c. i, iii

d. ii, iii e. விடை தெரியவில்லை

46. Which of the statements given here under is/are right in relation to the Indus valley civilization?

i. Horses were used for travel/transport.

ii. Camels and buffaloes were used for farming.

iii. They used wheat, barley, paddy and seseme seeds.

a. i, ii, iii b. i, ii c. ii, iii d. i, iii e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சிந்துவெளி நாகரிகம் பற்றி சரியானவை எவை?

i. குதிரையைப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தினர்.

ii. ஒட்டகங்களும், எருமைகளும் வேளாண்மைக்குப் பயன்படுத்தினர்.

iii. கோதுமை, பார்லி, நெல், எள் போன்றவற்றை பயன்படுத்தப்பட்டன.

a. i, ii, iii b. i, ii c. ii, iii d. i, iii e. விடை தெரியவில்லை

47. Which of the following are correct?

i. Rajasimhan built the Kaanchi Kailaasanaathar temple

ii. The Vettuvaan temple in Kazhugumalai is called Ellora of the South

a. i, ii b. ii c. i d. None e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர் இராஜசிம்மன்

ii. தென்னகத்தின் எல்லோரா என்று அழைக்கப்படுவது கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோவில்

a. i, ii b. ii c. i d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை

48. Which book refers to sculptors as "Manneettaalar"

a. Silappadhigaaram b. Manimegalai

c. Seevagasindhaamani d. Puranaanooru

e. Answer not known

சிற்பக்கலைஞர்களை "மண்ணீட்டாளர்" என அழைக்கும் வழக்கம் இருந்ததைக் குறிப்பிடும் நூல் எது?

a. சிலப்பதிகாரம்
b. மணிமேகலை
c. சீவகசிந்தாமணி
d. புறநானூறு
e. விடை தெரியவில்லை

49. Match the following

A. Pathirru Pathu — 1. The Cholar
B. Pattina Paalai — 2. The Cheras
C. Madurai Kaanchi, Paripaadal — 3. The Pandiyas

பொருத்துக.

A. பதிற்றுப்பத்து — 1. சோழர்கள்
B. பட்டினப்பாலை — 2. சேரர்கள்
C. மதுரைக்காஞ்சி, பரிபாடல் — 3. பாண்டியர்கள்

| | A | B | C |
|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 |
| b. | 2 | 3 | 1 |
| c. | 3 | 1 | 2 |
| d. | 2 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

50. The Chola kingdom was rich by trade through land and sea which among the following Tamil works refers to this using the poeticals phrase "Muttaa Sirappin Pattinam".

a. Silapathikaaram
b. Pattina Palai
c. Periapuranam
d. Yapparunkalakaarikai
e. Answer not known

சோழ நாடு, தரைவழி வணிகத்தாலும் கடல்வழி வணிகத்தாலும் வளம் பெற்றிருந்தனை "முட்டாச் சிறப்பின் பட்டினம்" என்று குறிப்பிடும் நூல்?

a. சிலப்பதிகாரம்
b. பட்டினப்பாலை
c. பெரியபுராணம்
d. யாப்பெருங்கலகாரிகை
e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187